முருகப்பெருமான் துணை

**மகான் புதபகவான் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.12.2023**, சனிக்கிழமை

1. பிரணவ குடில் படைத்த அரங்கா
பிரளயம் இனி காணா புவியை
சரவணச் சுடரேற்றிக் காக்க
சற்குருவாய் வந்த தேசிகா
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது தேள் திங்கள்
அறிவிக்க மூவேழீர் திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 23 ம் நாள், 09.12.2023, சனிக்கிழமை)
3. வாரமதில் புதபகவான் யானும்
வழங்குவேன் உலக நலம்பெற
அறிவுத் தெளிவு திடம் கண்டு
ஆன்மீக ஞானபலம் மக்கள் அடைய
4. அடையவே மக்களை நோக்கி
ஆறுமுகனார் ஞானம் தர
தடையற மக்கள் அனுகி
தவசி அரங்கனிடம் தீட்சை ஏற்று
5. ஏற்றுமே முருகா அரங்கா என
எக்கணமும் செபதபம் தன்னை
ஆற்றல் பெருக செய்து வர
அவரவர்க்கும் தெளிவு திடம்
6. திடம் முருகப் பெருமானால்
தெய்வ சக்தியாகக் கிட்டி
இடரனுகா வண்ணம் உலகை
இனிதே காக்கும் சக்திகளாக

7. ஆகவே அரங்கன் தொண்டர்படை
அளவிலா ஞானப்படைகளாக
வகைபட மாறித் தேற்றம்
வையகம் ஞானத்தலைமை

8. தலைமை காணும்படிச் செய்யும்
தலைவனாக முருகனே இறங்க
ஊழல் வஞ்சம் இல்லாத
உண்மை நிறைந்த ஆளுமை

9. ஆளுமையாக உலகமெங்கும்
அமைத்து உலக மாற்றம்
வலுவாக அரங்கன் படைகள்
வையகம் தன்னில் நிரப்பி இனிதே

10. இனிதே ஞான ஆட்சி தரும்
எங்கும் தருமபலம் மிக்க
கனிவேலவன் துணைகொண்ட
கருணை அமைதி தரும் வண்ணம்

11. வண்ணம் சான்றோர் ஆட்சி
வையகம் கண்டுமே திளைக்கும்
அண்ணல் அரங்கனால் நடக்கும்
அருளிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–